**மொரட்டுவ மா நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி மா நகர சபையின் நகர முதல்வருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை மொரட்டுவ மா நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பிணியாளர் காவும் வண்டியொன்றை பயணிகள் போக்குவரத்து வண்டியொன்றாக மாற்றுவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,915,000 தொகையான பணம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வணிக மற்றும் வியாபார வளாகங்களில் குப்பைகளை கொட்டுவதற்காக ஆண்டிற்குரிய வருமானம் ரூபா 360,000 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணத்தால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வணிக மற்றும் வர்த்தக வளாகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளை மீளளிப்பு செய்தல் தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ளன. நிதியேற்பாடுகள் போதியளவில் இல்லாதிருந்தமையின் காரணத்தால் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டுள்ள உள்ளூராட்சி திணைக்களத்தின் மீளளிப்புகள் மறுக்கப்பட்டுள்ளன. ரூபா 4,817,000

தொகையான உதவிக் கொடுப்பனவுகள் பெற வேண்டிய வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணத்தால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்புத் தொகை ரூபா 2,820,047 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் பெற வேண்டிய சம்பள மீளளிப்பு ஆகியன அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுள்ள 134 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 886,427 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 784,147 தொகையான பாதுகாப்புக் கட்டணங்கள் கணக்கு வைக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

---

சபையினால் பொருத்தமான நிதி நிர்வாகமொன்று பேணப்பட்டிராமையால் பிரதான நடைமுறைக் கணக்கினூடாக பெற்றுக்கொள்ள நேர்ந்திருந்த வங்கி மேலதிகப்பற்று வசதிகளுக்காக சபைக்குச் சொந்தமான ரூபா 19,416,309 பெறுமதியான நிலையான வைப்புக்கள் பிணைக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக்கூற்றுக்களின் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 529,237,518 கூட்டுத்தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றுடன் தொடர்புடைய பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது, நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 36,329,011 தொகையும், குறைவாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 10,951,147 தொகையுமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய காலப்பகுதிகளுக்கு உரியதாக பானதுர பிரதேச சபையின் கரதியான குப்பை அகற்றுமிடத்தில் கழிவுகளை அகற்றுவதற்காக அந்த சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,899,833 தொகையான பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. குப்பைகளை அகற்றுவதற்காக மேல் மாகாணத்தின் கழிவு முகாமைத்துவ அதிகார சபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 2014 யூன் 04 ஆந் திகதி நிறைவு பெற்றிருந்த போதிலும், அதனை நாளதுவரையாக்குவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட தெலவல மற்றும் கல்தமுல்ல ஆகிய தொகுதிகளுக்குரியதாக 2011, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 129 வழக்குகளுக்குரியதாக பெற வேண்டிய தண்டப்பணம் மற்றும் குத்தகை வாடகையான ரூபா 263,350 தொகை சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) இடமாற்றல் பெற்றுச்சென்ற 16 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 84,846 தொகை மற்றும் சேவையை விட்டுச்சென்ற, ஓய்வூதியம் பெற்ற 131 ஊழியர்களிடமிருந்து ஊழியர் கடனுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,572,924 தொகையில் 2015 ஆம் ஆண்டினுள் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெற வேண்டிய மீதிகளில் 05 வருடங்களுக்கு முன்பிருந்தே எதுவித தொகையும் அறவிடப்படாதிருந்த ரூபா 15,569,883 தொகையான 09 மீதிகள் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த அறவிடப்பட வேண்டிய பெறுமதியில் 92 சதவீதம் வீதி விளக்குகளை பராமரித்தல், களியாட்ட வரி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட முற்பணங்களிலிருந்த பெறப்பட வேண்டியிருந்தது.

(உ) நகர அமைச்சர்கள் மூவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்த நிலுவை எரிபொருள் படிகள் முறையே ரூபா 268,600 ரூபா 268,100 மற்றும் ரூபா 49,867 எனுமாறு ரூபா 586,567 கூட்டுத்தொகையான பணத்தில் மீளாய்வாண்டில் எதுவித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 19,913,489 தொகையான மீள செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளில் 02 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,254,578 ஆக இருந்ததுடன், இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்படி வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,040,824 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 93,282,206 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

-------------------------

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396 இன் பிரகாரம் வழங்கி 06 மாதங்களை கடந்த ரூபா 34,588 கூட்டுப் பெறுமதியுடைய 10 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 371(2) இன் பிரகாரம் முற்பணம் பெறப்பட்ட செயற்பாடு முடிவடைந்தவுடன் அந்த முற்பணத் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டினுள் 26 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 275,500 தொகையான முற்பணத் தொகையினை தீர்ப்பதற்கு 27 நாட்கள் முதல் 342 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் முற்பணம் பெறப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த முற்பணம் தீர்க்கப்பட வேண்டும் எனினும், 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 19 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக ரூபா 71,402 தொகையான முற்பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

-----------------------------

#### 2.3.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

---------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நகர முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | ஆண்டிற்குரிய நிலுவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2014 உள்ளபடியாக அறவிடப்பட வேண்டியது | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 110,290 | 58,701 | 51,589 | 149,204 | 87,722 | 111,884 |
| குத்தகை வாடகை, | 12,622 | 11,159 | 1,463 | 3,194 | 10,973 | 3,395 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 12,726 | 11,083 | 1,643 | 54,045 | 14,370 | 53,304 |
| ஏனைய வருமானம் | 152,924 | 152,924 | - | 10,140 | 195,256 | 10,140 |
| | 288,562 | 233,867 | 54,695 | 216,583 | 308,321 | 178,723 |

### 2.3.2 வீத வரியும் வரியும்

மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252 இன் பிரகாரம் நகர ஆணையாளரால் நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 145,975,458 இற்கான நிலுவை வீத வரி மீதி ஒன்று காணப்பட்டது. இந்த மீதியினுள் ரூபா 50,000 இனை விஞ்சிய 128 இடங்களுக்குரிய ரூபா 56,313,028 தொகையான மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 குத்தகை வாடகை மற்றும் அனுமதிப்பத்திர கட்டணம்

(அ) வாடகைக்கு வழங்கப்பட்ட 291 கடைகளுக்குரிய 130 குத்தகையாளர்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறித்தவாறு வாடகைப் பணத்தினை செலுத்தியிராததுடன் நிலுவை வாடகை தொகை ரூபா 3,057,788 ஆகும்.

(ஆ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 266 ‘‘அ’’ ஏற்பாட்டின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஏதேனுமொரு தொகையினை கைவிடும் உத்தேச தீர்மானமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையின் முன்மொழிவுத் தீர்மானமொன்றில்லாமல் சபையினை அழைத்து அனுப்பப்பட்ட

மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகள் குழுவின் முன்னிலையில் வைத்தலின் கீழ் கலந்தாலோசிக்கப்பட்டு மீளாய்வாண்டில் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 2175 நிறுவனங்களிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய வரி மற்றும் அனுமதிப்பத்திர கட்டணம் ஆகியவை விடுதலை செய்யப்பட்டிருந்துடன் அதன் காரணமாக மீளாய்வாண்டினுள் நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திர கட்டண வருமானமும் சபைக்கு இழப்பாகியிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது அனுமதிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டிற்கான வியாபார வரிகளை செலத்தியிராத வியாபாரிகளுக்காக சபையினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளை வாபஸ் பெற்றமையின் காரணத்தால் வரி செலுத்தாத 52 வியாபாரங்களின் மற்றும் அனுமதிப்பத்திரங்களை பெற்றிராத 117 நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ஆகியன சபைக்கு இழப்பாகியிருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

---------------------------------------------

2015 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண அறிக்கைகள் மற்றும் கிடைத்த பணம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 10,341,899 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**3.1 செயற்பாட்டு திறமையின்மை**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 208 ஊழியர்களுக்காக ரூபா 13,825,119 கூட்டுத்தொகையான பங்களிப்பு பணம் அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த ஊழியர்களை நிதியத்தில் பதிவு செய்வதற்கு தேவையான அடையாள அட்டைகளை சமர்ப்பித்து இலக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சபை இது வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 1,110,133 பெறுமதியான 4546 குப்பைத் தொட்டிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டிராததுடன், அந்த குப்பைத் தொட்டிகளை பகிர்ந்தளித்த எவரும் அவர்களின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் ஊழியர்கள் ஓய்வூதியத்திற்கான உரித்தினைப் பெறும் காரணத்தால் 2006 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு ஓய்வூதியத்திற்காக செலுத்தி மீண்டும் இலங்கை மத்திய வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள ரூபா 2,095,581 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காது 2015 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகநெகும செயற்திட்டம் மற்றும் உள்ளக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு பணம் கிடைப்பதற்கு முன்னர் செயற்திட்டங்களின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக கடன் பெறப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,646,442 தொகையான கடன் வட்டி மற்றும் கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் ரூபா 8,068 தொகையான மிகை வட்டியினை மொரட்டுவ மக்கள் வங்கிக்கு செலுத்த நேர்ந்த்திருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் பொருத்தமானதொரு நிதி நிர்வாகமொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் செயற்படுகின்றமையால் 2015 ஆம் ஆண்டின் யூன் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை பிரதான நடைமுறைக் கணக்கில் தொடர்ச்சியான வங்கி மேலதிகப்பற்றொன்று மற்றும் மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியக் கணக்கில் 2015 ஆகஸ்ட், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வங்கி மேலதிகப்பற்றொன்று நிலவியமையின் காரணத்தால் ரூபா 817,908 ஆன வங்கி மேலதிகப்பற்று வட்டியினை செலுத்த நேர்ந்திருந்தது.

**3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

மாநகர சபைக் கட்டளைச் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) உப பிரிவு 188(1) இன் பிரகாரம் செலவினங்கள் நிதியேற்பாடுகளில் மேவுகை செய்யப்படாத செலவினங்களாக மாநகர சபை கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக உடைகளை கொள்வனவு செய்வதற்காக 17 உத்தியோகத்தர்களுக்காக 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூபா 194,130, மற்றும் ரூபா 221,350 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

----------------------------------------

(அ) உத்தரவாதக் காலத்தினுள் எரியாது போன சீ.எப்.எல் மின்குமிழ்களுக்காக அவற்றை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு மீள கையளிக்கும் போது 164 மின்குமிழ்களை குறைவாக வழங்கியமையால் சபைக்கு ரூபா 52,480 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் மின்சார கட்டணங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் தாமதமடைந்ததன் காரணத்தால் மிகை அறவீடாக ரூபா 22,655 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 வாகனப் பயன்பாடு

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 228 ஆம் பிரிவின் பிரகாரம் வாகன சேவைப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக எதுவித உடன்படிக்கையொன்றையும் கைச்சாத்திடாமல் குறித்த நிறுவனத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 975,100 செலுத்தப்பட்டிருந்தது. சேவைப்படுத்தல் இடம்பெற்றதாக குறிப்பிட்ட வாகனங்கள் அதற்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக பதிவு செய்யப்பட்டிராததுடன் குறித்த சம்பவக்குறிப்பு புத்தகங்களிலும் அது தொடர்பில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 மார்ச் 29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான பிணியாளர் காவும் வண்டியொன்றை முறையான நடைமுறையொன்று, அங்கீகாரம் அல்லது மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவிக்காமல் ரூபா 1,915,000 தொகையான கிரயமொன்றை மேற்கொண்டு சபையினால் பயணிகள் போக்குவரத்து வாகனமொன்றாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆவணம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான ரூபா 4,500,000 கிரயமான கெப் வண்டியொன்று சமார் 02 வருட காலமாக தொலைந்து போயிருந்தது.

(ஈ) நகர சபைக்கு சொந்தமான 9 வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையில் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள ரூபா 15,873,045 பெறுமதியான 37 வாகனங்கள் பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையின் 13 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக்குறிப்பு புத்தகங்களிலும், 27 வாகனங்களுக்குரியதாக வருடாந்த வருமான அனுமதிப் பத்திரங்களும் 17 வாகனங்களுக்குரியதான வருடாந்த வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 1985 ஆம் ஆண்டின் போது மற்றும் 1997 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 02 தீயணைக்கும் வாகனங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 1642 இன் பிரகாரம் வாகனங்கள் தொடர்பில் அவசர விபத்துகள் எவ்வளவு சிறியதான போதிலும் பொலிசுக்கு அறிக்கையிடப்பட

வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் வாகன விபத்துக்களின் பின்னரான பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 219,750 செலவிடப்பட்ட 03 அவசர விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு அறிவித்திருக்கவில்லை.

(ஐ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு ஆகியன அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் சபையின் எந்தவொரு வாகனம் தொடர்பிலும் மாதாந்த பொழிப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 1653 இன் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்களின் மைலோ மீட்டர் செயற்பாட்டில் காணப்பட வேண்டிதுடன், செயலிழக்குமாயின் உடனடியாக பழுதுபார்க்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபைக்கு சொந்தமான 35 வாகனங்களின் மைலோ மீட்டர்கள் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலமாக செயலிழந்து காணப்பட்டன.

(ஓ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 90/41 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 06 மாதத்திற்கு ஒரு தடைவ வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான சுயாதீனமானதொரு உத்தியோகத்தரால் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2016 பெப்ரவரி 29 ஆந் திகதிய பிரதம செயலாளரின் (மேல் மாகாணம்) 01/2016 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற சபையின் பிரதி நகர ஆணையாளரால் சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று தமது கடமைகளுக்காகவும் வீட்டிற்கு சென்று வருவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 04 வாகன விபத்துக்களுக்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை தீர்மானிப்பதற்கும் நட்டத்தை குறித்த பொறுப்புகூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 103,104,105 மற்றும் 110 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 ஒப்பந்த நிருவாகம்**

---------------------------

2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (iv) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு உப ஒப்பந்தத்திற்கு வழங்ககூடாத போதிலும், அதற்கு முரணாக 06 செயற்திட்டங்களுக்காக வெளிவாரி நிறுவனங்களுக்கு ரூபா 1,999,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் வருமான மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாடுகளை மாற்றுவதன் மூலம் மற்றும் மேலதிகமான மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களில் 5 முதல் 38 சதவீதம் வரையான விலகல் நிலவிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 335,720,000 தொகையான வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்ட 08 வருமானத் தலைப்புகளிலிருந்து மீளாய்வாண்டின் எதுவித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

(இ) உக்கக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்காக ரூபா 8,800,000 பெறுமதியான 18 லீட்டர் அளவிலான 40000 பிளாஸ்டிக் கொள்கலன்களை கொள்வனவு செய்து அவற்றை பகிர்ந்தளிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அதற்காக 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் அல்லது குறைநிரப்பு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டிற்காக வெளியிடப்பட்ட 23 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பதில் / விடயங்களின் விளக்கமளித்தல் இடம்பெற்றிராததுடன். அந்த வினாக்களுக்கு உட்பட்ட மதிப்பிடக்கூடி கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 77,628,008 ஆகும். 2014 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த 11 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்ட திகதிகள் வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து எதுவித விநியோகமுமின்றி லுனாவ செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட 26 வகையான வாகன உதிரிப்பாகங்களுக்குரிய 154 அலகுகள் மற்றும் மேலும் 350 வகையான விடயங்களுக்குரிய 1,277 அலகுகள் எதுவித பாவனையுமின்றி களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மத்திய சந்தைத்தொகுதி கட்டிடத்தின் இரண்டாவது மாடி 2010 ஒக்தோபர் 31 ஆந் திகதியின் பின்னர் வருவாய் கிடைக்கும் வகையில் எந்தவொரு நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ வாடகைக்கு வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன்,

சபைக்கு சொந்தமான எந்தவொரு கடைத்தொகுதி கட்டிடமும் 10 வருட காலமாக வெள்ளையடிப்பதற்கோ பழுதுபார்ப்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திராமையால் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டன.

(இ) சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளக்கப்பட்ட ரூபா 10,417,864 கிரயமான 12 வாகனங்கள் 1 முதல் 7 வருடங்கள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) சபையின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக பேணிச் செல்லப்படும் சாதாரண வைப்புக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல உள்ளபடியான ரூபா 7,460,159 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன், இந்த கணக்கு மீதிக்காக சாதாரண வட்டி வீதமொன்று மாத்திரம் கிடைக்கின்ற போதிலும் நீண்ட காலமாக குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிர்வாகம்